## கலைஞரின் நினைவுபோற்றிக்

# கழகத்தின் வெற்றிக்கு உறுதியேற்போம்!

## ‘உங்களில் ஒருவன்’ கடிதம்... முதல் பக்கத் தொடர்ச்சி

எதிர்க்கட்சியாக உள்ள அ.தி.மு.க.வோ அடங்கி ஒடுங்கி பா.ஜ.க.வுக்கு அடிமைச் சேவகம் செய்து கொண்டிருக்கிறது.

“வீரன் சாவதே இல்லை, கோழை வாழ்வதே இல்லை “என்றார் தலைவர் கலைஞர். கழகத்தினர் களத்தில் வீரர்களாக நிற்கிறார்கள். தமிழைக் காக்கவும் தமிழ்நாட்டின் உரிமைகளை மீட்கவும் திராவிட முன்னேற்றக் கழகம் என்றென்றும் முத்தமிழறிஞர் கலைஞர் வழியில் உறுதியுடனும் தெளிவுடனும் தன் போராட்டத்தை முன்னெடுக்கும். தமிழ் மக்களின் வளமான வாழ்வுக்கான திட்டங்களைத் தொடர்ந்து செயல்படுத்தும்.

எப்போதும் மக்களுடன் நிற்கின்ற இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம் எனும் தலைவர் கலைஞர் கட்டிக் காத்த இயக்கம். அவர் இல்லை என்று எண்ணாமல், என்றென்றும் அவர் நினைவுகளில் வாழ்கின்ற கோடிக்கணக்கான உடன்பிறப்புகளில் உங்களில் ஒருவனான நானும் இருக்கிறேன். ஆகஸ்ட் 7 அன்று நம் உயிர்நிகர் தலைவரின் நினைவு நாளில் தமிழர் வாழும் நிலமெங்கும் அவர் நினைவைப் போற்றுவோம்.

**வங்கக் கடற்கரையில் தன் அண்ணனுடன் நிரந்தர ஓய்வு கொண்டுள்ள முத்தமிழறிஞர் கலைஞரின் நினைவிடம் நோக்கி ஆகஸ்ட் 7 அன்று நடைபெறும் அமைதிப் பேரணியில் உடன்பிறப்புகள் கடலெனத் திரண்டு வணக்கத்தைச் செலுத்துவோம். மாவட்டங்கள்தோறும் அமைக்கப்பட்டுள்ள தலைவர் கலைஞரின் திருவுருவச் சிலைகளுக்கு அந்தந்த மாவட்டக் கழக நிர்வாகிகள் – உடன்பிறப்புகள் மாலையிட்டு மரியாதை செலுத்திட வேண்டும். கிளைகள்தோறும் தலைவர் கலைஞரின் நினைவு போற்றப்பட வேண்டும். இந்நிகழ்வுகளில் கழக நிர்வாகிகள் காலை 7 மணியளவில் பங்கேற்றிட வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.**

வீடுகளிலும் வீதிகளிலும் தமிழ் காத்த போராளியாம் முத்தமிழறிஞர் கலைஞரின் திருவுருவப் படங்களுக்கு, மலர்தூவி வணக்கம் செலுத்துங்கள். தலைவர் கலைஞரின் நினைவுகளை நெஞ்சிலேந்தி, கொள்கைவழிப் பயணத்தைத் தொடர்ந்து, 2026 சட்டமன்றத் தேர்தலில் 7-ஆவது முறையாகக் கழக ஆட்சி அமைந்திட உறுதியேற்போம். ஓரணியில் தமிழ்நாடு எனும்மகத்தான முன்னெடுப்பில் மக்களை ஒருங்கிணைத்துக் களத்தில் வெல்வோம்!தலைவர் கலைஞர் புகழ் ஓங்குக! திராவிட முன்னேற்றக் கழகம் வெல்க!

அன்புடன்

**மு.க.ஸ்டாலின்**

திருவள்ளுவர் ஆண்டு 2056

ஆடி 18

03-08-2025.

## தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும்

# “நலம் காக்கும் ஸ்டாலின்” திட்ட சிறப்பு மருத்துவ முகாம்!

## சென்னை - சாந்தோம் பள்ளியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!

**சென்னை, ஆக.3–**

**தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் “நலம் காக்கும் ஸ்டாலின்” சிறப்பு மருத்துவ முகாமினை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்.**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (2.8.2025) மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் சென்னை, சாந்தோம், செயின்ட் பீட்ஸ் ஆங்கிலோ இந்தியன் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில், தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் “நலம் காக்கும் ஸ்டாலின்” சிறப்பு மருத்துவ முகாமினை தொடங்கி வைத்தார்.

**“நலம் காக்கும் ஸ்டாலின்” சிறப்பு மருத்துவ முகாம்கள் தொடக்க விழா!**

2025-26ஆம் ஆண்டிற்கான மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை மானியக் கோரிக்கையில், உயர் மருத்துவ சேவைகள் வழங்க ரூ.12.78 கோடி செலவில் மருத்துவ முகாம்கள் நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

அதன்படி, தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் “நலம் காக்கும் ஸ்டாலின்” சிறப்பு மருத்துவ முகாமினை முதலமைச்சர் அவர்கள் இன்றைய தினம் தொடங்கி வைத்தார். இந்த உயர் மருத்துவ சேவை சிறப்பு முகாமிற்கு ரூ.1,08,173 வீதம் மாநிலம் முழுவதும் மொத்தம் 1,256 முகாம்களுக்கு ரூ.13.58 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஒரு வட்டாரத்திற்கு 3 முகாம்கள் வீதம், 388 வட்டாரங்களில் 1,164 முகாம்களும், ஒரு மண்டலத்திற்கு ஒரு முகாம் வீதம், பெருநகர சென்னை மாநகராட்சியில் 15 முகாம்களும், ஒரு மாநகராட்சிக்கு 4 முகாம்கள் வீதம் 10 இலட்சம் மக்கள் தொகைக்கு அதிகமாக உள்ள 5 மாநகராட்சிகளில் 20 முகாம்களும், ஒரு மாநகராட்சிக்கு 3 முகாம்கள் வீதம் மக்கள் தொகை 10 இலட்சத்திற்கு குறைவாக உள்ள 19 மாநகராட்சிகளில் 57 முகாம்களும், என மொத்தம் 1,256 முகாம்கள் நடத்தப்படும்.

இம்முகாம்கள் சிறப்பு மருத்துவ வசதிகள் குறைந்த ஊரகப் பகுதிகள், குடிசைப் பகுதிகள், பழங்குடியினர் அதிகம் வசிக்கும் பகுதிகளில் முன்னுரிமை அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டு நடத்தப்பட உள்ளன. 40 வயதிற்கு மேற்பட்டோர், நீரிழிவு மற்றும் உயர் இரத்த அழுத்த நோயால் பாதிக்கப்பட்டவர்கள், மன நல பாதிப்புடையோர், இதய நோயாளிகள், கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள், வளர்ச்சிக் குன்றிய குழந்தைகள், மாற்றுத் திறனாளிகள், பழங்குடியினர் மற்றும் சமூகபொருளாதார ரீதியில் பின்தங்கிய மக்களுக்கு இம்முகாம்களில் முன்னுரிமை வழங்கப்படும்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் வாரந்தோறும் சனிக்கிழமைகளில் காலை 9.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை உள்ளாட்சி அமைப்புகள், பள்ளிக் கல்வித் துறை, உயர் கல்வித் துறை, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை,

மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளை ஒருங்கிணைந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பள்ளி மற்றும் கல்லூரி வளாகங்களில் இம்முகாம்கள் நடத்தப்பட உள்ளன.

இம்முகாம்களில் இரத்த அழுத்த பரிசோதனை மற்றும் அனைத்து பயனாளிகளுக்கும் இரத்த மாதிரிகள் சேகரிக்கப்பட்டு முழுமையான இரத்த அணுக்களின் எண்ணிக்கை, இரத்த சர்க்கரை அளவு, சிறுநீரக செயல்பாட்டு சோதனைகள் செய்யப்பட உள்ளன. மேலும், பொது மருத்துவ நிபுணரின் அறிவுறுத்தலின்படி ஈ.சி.ஜி, எக்கோ, எக்ஸ்ரே, ஸ்கேன், காசநோய் மற்றும் தொழுநோய் பரிசோதனைகள், பெண்களுக்கான கர்ப்பப்பை வாய் மற்றும் மார்பக புற்றுநோய் கண்டறியும் பரிசோதனைகளும் செய்யப்படவுள்ளன.

இம்முகாமில் பங்குகொள்ளும் பயனாளர்களுக்கு பொது மருத்துவம், பொது அறுவை சிகிச்சை மருத்துவம், இருதய மருத்துவம், எலும்பியல் மருத்துவம், நரம்பியல் மருத்துவம், தோல் மருத்துவம், காது, மூக்கு மற்றும் தொண்டை மருத்துவம், மகப்பேறு மருத்துவம், இயன்முறை மருத்துவம், பல் மருத்துவம், கண் மருத்துவம், மன நல மருத்துவம், குழந்தைகள் நல மருத்துவம், நுரையீரல் மருத்துவம் ஆகிய மருத்துவச் சேவைகள் மற்றும் இந்திய மருத்துவம் சார்ந்த ஆலோசனைகள் சிறப்பு மருத்துவ நிபுணர்களை கொண்டு வழங்கப்படும்.

மேற்குறிப்பிட்ட பரிசோதனைகள் மட்டுமின்றி, முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டு திட்டத்தின் கீழ் பதிவு செய்தல் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கான அரசு அங்கீகார சான்றிதழ் வழங்கப்படும். இம்முகாம்களின் விரிவான தரவுத் தொகுப்பு, தொடர் கண்காணிப்பு மற்றும் பின்தொடர் சிகிச்சை நடவடிக்கைகள் நவீன சுகாதார மேலாண்மைத் தகவல் முறைமை (HMIS 3.0) வாயிலாக கண்காணிக்கப்படும்.

“நலம் காக்கும் ஸ்டாலின்” சிறப்பு மருத்துவ முகாமினை முதலமைச்சர் அவர்கள் இன்றையதினம் தொடங்கி வைத்து, முகாமில் பயனாளிகளுக்கு மேற்கொள்ளப்படும் மருத்துவ பரிசோதனைகளை பார்வையிட்டு, பயனாளிகளிடம் கலந்துரையாடினார். மேலும், “நலம் காக்கும் ஸ்டாலின்” முகாமில் அமைக்கப்பட்டுள்ள பொது மருத்துவம், இருதய மருத்துவம், இந்திய மருத்துவம் உள்ளிட்ட பல்வேறு மருத்துவப் பிரிவுகளை பார்வையிட்டார். பின்னர், முகாமில் கலந்து கொண்ட பயனாளிகளுக்கு முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு அட்டைகள், மாற்றுத்திறனாளிகளுக்கு காதொலி கருவிகள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான அடையாள அட்டைகளை வழங்கினார்.

முதலமைச்சர் அவர்கள் இன்றையதினம் “நலம் காக்கும் ஸ்டாலின்” சிறப்பு மருத்துவ முகாமினை தொடங்கி வைத்ததை தொடர்ந்து, காணொலி வாயிலாக மாநிலத்திலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் இந்தச் சிறப்பு மருத்துவ முகாம்களில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் பங்கேற்றனர்.

இந்த நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர் பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் த.வேலு, மருத்துவர் நா. எழிலன், எபினேசர், வெற்றியழகன், அரவிந்த் ரமேஷ், ஜோசப் சாமுவேல், க. கணபதி, தாயகம் கவி, ஆர்.டி. சேகர், ஜெ. கருணாநிதி, பிரபாகரராஜா, வி.ஜி. ராஜேந்திரன், துணை மேயர் மு. மகேஷ் குமார், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் ப. செந்தில்குமார், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ. குமரகுருபரன், தேசிய நலவாழ்வு குழும இயக்குநர் மரு. அ.அருண் தம்புராஜ், இந்து குழும இயக்குநர் என். ராம், முன்னாள் அமைச்சர் திருமதி பூங்கோதை ஆலடி அருணா, உள்ளாட்சி அமைப்புகளின் பிரநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




சென்னை, எண்ணூர் கொசஸ்தலை ஆற்றின் முகத்துவாரம் பகுதியில், நேற்று (02.08.2025)வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மேற்கொள்ளப்பட்டு வரும் தூர்வாரும் பணிகளை நீர்வளத்துறை செயலாளர் ஜெ.ஜெயகாந்தன், நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது, நீர்வளத்துறை முதன்மை தலைமைப் பொறியாளர்/தலைமைப் பொறியாளர் (பொது) சு.கோபாலகிருஷ்ணன், சென்னை மண்டல தலைமைப் பொறியாளர் .சி.பொதுப்பணித்திலகம் மற்றும் நீர்வளத்துறை உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

## முத்தமிழறிஞர் கலைஞர் 7-ம் ஆண்டு நினைவுநாள்!

# இராணிப்பேட்டை மாவட்டத்தில் அமைதி ஊர்வலம் - அஞ்சலி!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் ஆர்.காந்தி அறிக்கை!

இராணிப்பேட்டை, ஆக. 3–

இராணிப்பேட்டை மாவட்டச் செயலாளர் – அமைச்சர் ஆர்.காந்தி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:–



பதினான்கு வயதில் தமிழ் கொடியேந்தி, தமிழ் வாழ்க என முழக்கமிட்டு பொது வாழ்வை துவங்கிய கலைஞர் மாணவப் பருவம் முதலே இயக்கத்தை இணைத்து, பெரியாரின் பெருஞ்சீடனாய் , பேரறிஞர் அண்ணாவின் அன்பு தம்பியாய், வளம் வந்த கலைஞர் என் உயிரினும் மேலான உடன்பிறப்பே என்று தன் உயிரோடும், உணர்வோடும் கலந்தவர், கலைஞர் அவர்கள் பன்முகத் திறன் கொண்டவர். அவரது எழுத்தாற்றல் எங்களை அடிமையாக்கியது, பேச்சாற்றல் எங்களை வீறுகொண்டு எழச்செய்தது, பட்டித்தொட்டி எங்கும் கழக கொள்கைகளை பறைச்சாற்றி, கழகத்தை காத்து நின்ற காவிய தலைவன் அரசியலில் அவரை ஏய்த்தோரும், போற்றினோரும், அரசியல் வாழ்வு பெற்றது இதை காலம் மறந்திடாது.

கலைஞர் சங்கத் தமிழ் கண்டார், குரல் ஓவியம் கண்டார், பொன்னர் சங்கர் என்னும் பல அறிய புத்தகங்களை தந்தாலும், தொல்காப்பிய பூங்கா இந்த காலம் உள்ளவரை அவரது பெயரை காத்து நிற்கும், வள்ளுவர் கோட்டமும், பூம்புகாரும், குமரி முனையிலே வானுயர்ந்து நிற்கும் வள்ளுவர் சிலையும், நீங்கா புகழ் சேர்த்த கழகத்தின் பொன்விழா கண்ட தலைவர், அரசு கட்டிலிலே கண் ஒலி திட்டம், கை ரிக்ஷா ஒழிப்பு, குடிசை மாற்று வாரியம், பேருந்து பொதுஉடமையாக்கியது, மே தின விடுமுறை நாள், பெண்ணுக்கு சொத்துரிமை, உள்ளாட்சியிலே 33 சதவிகிதம் இட ஒதுக்கீடு, பெரியார் நினைவு சமத்துவபுரம், அண்ணா மறுமலர்ச்சி திட்டம், கலைஞர் காப்பீட்டு திட்டம், உழவர் சந்தை திட்டம், முதியோர் ஓய்வு தொகை, விலங்குகளுக்கும் வருமுன் காப்பு திட்டம், ஒரு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி, இடஒதுக்கீட்டை அமுல் செய்தது, முஸ்லீம்களுக்கு, அருந்ததியர்களுக்கு, உள் இடஒதுக்கீடு வழங்கியது, காலத்தால் மறைக்கவும் முடியாது, மறுக்கவும் முடியாது,

இந்தியாவிலே 13 முறை சட்டமன்ற உறுப்பினராக தேர்வு செய்யப்பட்டு நின்ற தேர்தல்களில் எல்லாம் வென்ற ஒரே தலைவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் ஆவார்.

தந்தை பெரியாரின் எண்ணங்களை, பேரறிஞர் அண்ணாவின் கனவுகளை, பெரியாரின் துணிவோடும், அண்ணாவின் கனிவோடும், செயலாற்றிய சிறுபான்மை மக்களின் பாதுகாவலர் 2018 ஆகஸ்ட் 7 ம் தேதி இயற்கை உங்களை எங்களை விட்டு பிரிய செய்தாலும், மாற்றான் தோட்டத்து மல்லிகையும் மணக்கும் என்று பேரறிஞர் அண்ணாவின் கூற்றின்படி அரசியல் எதிரிகளும், உங்களை புகழ்ந்தபோது மகிழ்ச்சியிலே திளைத்தவர்கள் நாங்கள், தமிழ்நாட்டின் தலைவர் மட்டுமல்ல, இந்தியாவின் வழிகாட்டி, பல பிரதமர்களையும், குடியரசு தலைவர்களையும்,உருவாக்கி சாதனை படைத்த சரித்திர தமிழ் அறிஞர் கலைஞர்.

தகைமைசால் தலைவராக – எழுத்தாளராக – கவிஞராக – சொற்பொழிவாளராக – திரைக்கதை வசன கர்த்தாவாக–இலக்கியவாதியாக – திரைப்படத் தயாரிப்பாளராக – தலைசிறந்த நிர்வாகியாக – தமிழகத்தின் ஐந்து முறை முதலமைச்சராக – உலகத் தமிழர்களின் ஒப்பற்ற தலைவராக விளங்கியவரும், திராவிட இயக்கத்தின் போர்வாள்களில் ஒருவராகத் கழகத்தில் தொடர்ந்து பணியாற்றி, அண்ணா அவர்களின் மறைவுக்குப் பிறகு, திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவராக ஏறத்தாழ 50 ஆண்டுகள் பொறுப்பு வகித்து, அகில இந்திய அரசியலில் சிறந்த வழிகாட்டியாகத் திகழ்ந்து, தமிழக வரலாற்றில் தமக்கென்று சில பக்கங்களை ஒதுக்கிக் கொண்ட முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 7 வது நினைவு நாளினையொட்டி 7.8.2025 வியாழக்கிழமை காலை 09.00 மணிக்கு இராணிப்பேட்டை மாவட்டம் முழுவதும் ஒன்றிய, நகர, பேரூர் மற்றும் ஊர் கிளை, வட்ட கிளை தோறும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருஉருவப் படத்திற்கு மாலை அணிவித்து அமைதி ஊர்வலமாகச் சென்று அஞ்சலி செலுத்துமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இந்நிகழ்ச்சியில் மாவட்டக் கழக நிர்வாகிகள், செயற்குழு, ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், மற்றும் நிர்வாகிகள், உள்ளாட்சி மன்ற நிர்வாகிகள், இளைஞர் அணி, மாணவர் அணி, மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி சுற்றுச் சூழல் அணி, தொழிலாளர் அணி, வழக்கறிஞர் அணி, தொண்டர் அணி, மீனவர் அணி, ஆதி திராவிடர் நலக்குழு, கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை, மருத்துவர் அணி, பொறியாளர் அணி, விவசாய அணி, விவசாயத் தொழிலாளர் அணி, நெசவாளர் அணி, சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு, வர்த்தகர் அணி, தகவல் தொழில் நுட்ப அணி, அயலக அணி, அமைப்புசார ஓட்டுநர் அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி ஆகிய அனைத்து அணியினரும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவு போற்றி அஞ்சலி செலுத்தும் வகையில் ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் சிறப்பாக ஏற்பாடு செய்திடுமாறு அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

# “அன்னம் தரும் அமுதகரம்” 164 வது நாள்!

## கொளத்தூர் மேற்குப் பகுதியில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு உணவு வழங்கினார்!

*சென்னை, ஆக. 3 -*

*தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு*



*1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு “அன்னம் தரும் அமுதக்கரங்கள்” மாபெரும் திட்டத்தின் 164 ஆம் நாளான - கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்தநாளை முன்னிட்டு நேற்று (02.08.2025), கொளத்தூர் மேற்கு பகுதி: 1) வட்டம் 65 லட்சுமி அம்மன் கோயில், 2) வட்டம் 65 அ ரெட்டேரி சந்திப்பு, கங்கை அம்மன் கோயில் தெரு, சென்னை ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு “தமிழ் நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தரமா ட்டோம். தமிழ் நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!” என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கினார்.*

*இந்நிகழ்ச்சியில் எ.நாகராசன், ஐ.சி.எப்.வ.முரளிதரன், கே.சந்துரு, சி.மகேஷ் குமார், தேவஜவகர், சரிதா மகேஷ்குமார், எஸ்.பன்னீர் செல்வம், துரைகண்ணன், ம.அசோக்குமார், ஆர்.எஸ். சித்திக், எஸ்.தனசேகர், டி .யோகப்பிரியா, என். தாவூத்பீ, பி.அமுதா, சி.ஸ்ரீதணி, வட்ட கழக செய லாளர்கள்: பி.ஊமைத் துரை, கே.பி. ஆதவன்மணி, என்.பொன்முடி, கே.ஜார்ஜ்குமார், பி.டி.சி.எஸ்.ரவி, பா.அன்பரசு, டி.சந்திர சேகர், எஸ்.முருகன், எம்.பி.தமிழ்ச்செல்வன், என். சௌந்தர், என்.பவுல்ராஜ், என்.இராமச்சந்திரன், எம். ஜெ.சி.பாபு, பி.அதிபதி. ஒருங்கிணைப்பாளர்கள்: சொ. வேலு, எஸ்.முரளி, ஆர்.ராஜன், கே.ஆர். அபரஞ்சி, அசோக் ஜெயின், பி.விஜயகுமார், ம.அசோக் குமார், எல்.சம்பத்கு மார்,க. பா.பிரதீப்குமார், மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.*




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நலம் காக்கும் ஸ்டாலின் திட்டத்தினை சென்னையிலிருந்து காணொலி காட்சி வாயிலாக நேற்று (02.08.2025) தொடங்கி வைத்ததைத் தொடர்ந்து, திருச்சிராப்பள்ளி மாவட்டம், தில்லை நகர், கி.ஆ.பெ.விஸ்வநாதம் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற முகாமில் நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு பங்கேற்று முகாமினை பார்வையிட்டு பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சித்தலைவர் வே.சரவணன் , மாநகராட்சி மேயர் மு.அன்பழகன் , மாநகராட்சி ஆணையர் லி.மதுபாலன், சட்டமன்ற உறுப்பினர்கள் சௌந்திரபாண்டியன் , எம்.பழனியாண்டி , சீ.கதிரவன் , அரசு மருத்துவக் கல்லூரி முதல்வர் மரு.எஸ். குமரவேல், இணை இயக்குநர் மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் மரு.கோபிநாத், மாவட்ட சுகாதார அலுவலர் மரு.ஹேமசந்த் காந்தி, அரசு அலுவலர்கள், மண்டலத்தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### என்.வி. நடராசன்

### ஆகஸ்ட் 3 (1975)



**சென்னை மாவட்டக் கழகத்தின் முதலாம் செயலாளர். கழகச் சட்டதிட்டங்களை உருவாக்குவதற்கு அமைக்கப்பட்ட சட்டதிட்டத் திருத்தக்குழுவின் முதல் செயலாளர், கழகத்தின் முதல் அமைப்புச் செயலாளர் மற்றும் தி.மு.கழகத்தில் மிக நீண்டகாலம் தலைமை நிலையச் செயலாளராக இருந்தவர் என்ற பெருமைக்குரியவர்.**

**அதுமட்டுமல்லாமல், கலைஞர் அவர்கள் முதல்வர் பொறுப்பேற்ற பிறகு, இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் புதுமை என்ற புகழ் பெற்ற ‘பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை’ அமைந்தபோது, அதன் அமைச்சராக முதலில் பதவி வகித்தவரும் இவர்தான்.**

**‘திராவிடன்’ என்ற இதழை துவக்கி கழகத்தின் போர்முரசமாய் அதை நடத்தி வந்தார்.**

**இந்தி எதிர்ப்பு, விலைவாசி உயர்வு உள்ளிட்ட பல அறப்போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**தலைவர் கலைஞர் அவர்கள் “நமது தி.மு.கழக மாலடோவ் என்.வி.என்” என பெருமைப்படக்கூறியது குறிப்பிடத்தக்கது.**

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**